1239

ARYA DHARMAM

TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-வரு வைகாசி-மீ 31உ 1940-வரு ஜூன்மீ 13உ | லக்-24

28 JUN 1940

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

நல்லுபதேசமே! காந்திஜீ அவர்கள் இச் சமயத்தில், அரசாங்கம் பாங்க் முதலிய விடங்களிலிருக்கும் பணத்தை வாங்கி உலகிற்கே துன்பத்தை விளைவிக்க வேண்டாமென்று கூறுவது அவர் பெருந்தன்மையையும் ராஜ தந்த்ரத்தையும் காட்டுகிறது. காங்கிரஸ் ஆக்ஷியிலும் பிரிட்டிஷ் ஆக்ஷி மிகச் சிறந்ததென காட்டி விட்டார்கள். எந்த ஆக்ஷியையும்விட விக்டோரியா கால ஆக்ஷி மிக மிக உயர்ந்ததென்பதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது.

ஊக்க மூட்டுகின்றனர்! ஸரோஜினி நாயுடு என்னும் தலைவியை அழைத்து வந்து தமிழ் நாட்டுத்தலைவர் இழந்த ஊக்கத்தை ஊட்ட முயற்சிக்கின்றனர். தர்ம விரோதமில்லாமல் பேசினால் தான் அவள் சொல்லுக்கு தமிழ் நாடு செவி மடுக்கும். இங்ஙனம் அடிக்கடி பெண் மூலமல்ல வட நாட்ட வரைக்கொண்டும் மத ஊக்க மூட்டவேண்டியது தலைவர் கடமை.

தனித்து நிற்கமுடியாது! அமெரிக்கா துர்க்கி ஆகிய நாடுகளது நிலை தனித்து உதாஸீனமாக நிற்கத் தக்கதில்லை. விரைவில் யுத்தத்தை நிறுத்த அவை முயற்சிக்க வேண்டும். இல்லையேல் பிரிடிஷுடன் அமெரிக்கா கலந்து யுத்தம் செய்தால் விரைவில் ஜயமுண்டாகும். என் தாமதம்.

இந்திய தற்காப்பு படை! சுபாஷ் போஸ் இங்ஙனம் ஓர் படை திரட்டி ராணுவ பயிற்சியளிக்க முயல்கிறார். இது முற்றிலும் நியாயமானதால் இந்திய அரசாங்கம்வேண்டிய உதவி செய்யவேண்டும். காங்கிரசும் அஹிம்ஸா தர்மத்தைப் பேசி வந்தாலும் இதைப் பூர்ணமாக ஆதரிப்பது மிக மிக நலமாகும். நமக்கு நாமே துணை.

பலருக்கு நம்பிக்கையிராது! நமது புராணங்களில் காணப்படும் விமானங்கள் அஸ்த்ர சாஸ்திரங்களும் தற்கால சண்டையில் விசேஷமாக ஜர்மனியால் உபயோகிக்கப்படுகிறது. பல்லாண்டுகளுக்கு முன்பே நமது நாட்டு ஓலைச் சுவடிகள் ஜர்மனிக்குச் சென்றதும்; அங்கு பல அரிய நூல்கள் அச்சிடப்பட்டதும் நமது நூலில் அவை இருந்தன எனக்காட்ட ஸாக்ஷிகளாம். இந்த லோக சுகத்தை வெறுத்த வைதிகராலும் சுத்த க்ஷத்திரியல்லாததாலுமே அவை அழிந்தன எனலாம். இது பலஹீனமான சொல்லல்ல.

பொறுப்பில்லாத ஸபை! ஜில்லா போர்டுகளோ நகர சபைகளோ தங்கள் கடமை என்னவென்று உணராமலும் அதை அனுஷ்டிக்காமலும் சில கக்ஷி நன்மையையும் சொந்த லாபங்களையும் கருதுபவர் நிறைந்ததாக காணப்படுகின்றன. உபசார பத்ரம் அளிப்பது போன்றதை மறந்து வெய்யில் காலத்தில் ஜலாசயங்களைக் காத்து நோய் வாராது சுத்த ஜலமளித்தல் முதலியதில் ஈடுபடல் நலம்.

சென்னை பிரசார ஆரம்பம்! அமரகலா விலாஸினி ஸபையார் வெளியூர் பிரசாரங்களை நடத்தி முடித்து 17உ முதல் சென்னையில் ஸ்காந்தம். ஸ்ரீ பாகவதம் பார்க்கவ புராணம். கர்க்க ஸம்ஹிதை முதலிய புராணப்ரவசந மூலம் தர்மப்ரசாரத்திற்காரம்பிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். மதுரை மெலட்டூர் வடயல் கருப்பூர் அழைப்புகள் வந்தனத்துடன் மறுக்கப்பட்டன. பிரசாரம் நடத்த ஸஹாயம் செய்த கீளூர் திருவண்ணாமலை விழுப்புரம் ஆகிய இடங்களுக்கு நன்றி செலுத்தப்படுகிறது.

கும்பகோணம்

கும்பகோணம் மேட்டுத்தெரு ஸ்ரீ செங்கழனீர் விநாயகர் ஆலயத்தில் நிகழும் விக்கிரமஷு ஆனிமீ 3உ (16—6—40) ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கர பகவத் பாதாளின் ஆக்ஞை ப்ரகாரம் ஏகாதசியை முன்னிட்டு டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீ எம். ராமராவ் பி. ஏ. அவர்களால் பிரஹ்லாதனின் பூர்வ சரிதம் உபந்யசிக்கப்படும். ஆஸ்திகர்கள் விஜயம் செய்து கதாச்ரவணம் செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.

டி. ஜெ. கிருஷ்ண மூர்த்தி,
ஸ்ரீமடம் முத்திராதிகாரி

1—6—40உ ஷை சோலையப்ப முதலியார் அக்கிரகாரம் ஸ்ரீவிசாலாக்ஷி அம்மன் ஸன்னதியில் ஸ்ரீ ஆசார்யாளின் ஆக்ஞைபடி மேலக்காவேரி ஸ்ரீ சிவராம சாஸ்திரிகள் அவர்கள் குருபக்தி என்பதை அதிபக்தியுடன் உபந்யஸித்தார்கள் விசேஷமாக ஆஸ்திக ஜனங்கள் விஜயமாகி கதாசிரவணம் செய்தார்கள்.

வருகிற 16—6—40 ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி அன்று ஸ்ரீ ஆசார்யாளின் ஆக்ஞைபிரகாரம் ஷை விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் மாலை 6½ மணி முதல் திருக்களாவூர் பிர்ம்மஸ்ரீ டி. எல். சுப்பையா பி. ஏ. பி. எல். அவர்கள் வேதமும் பிராம்மண்யமும் என்பதைபற்றி உபந்யஸிப்பார்கள் யாவரும் விஜயம் செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.

எஸ். சுப்ரமணிய அய்யர்
ஸ்ரீமடம் முத்திராதிகாரி.

கோவிலூர் காங்கிரஸ் கொடிமரம் இடி விழுந்து சாய்ந்தது

கோவிலூர் 6—6—40உ சேகரத்துபட்டி ராஜாஜி சதுக்கத்திலிருந்த காங்கிரஸ் கொடி மரத்தில் ஓர் இடி விழுந்தது. அதன் ஒளி பக்கத்திலிருந்த பலசரக்கு கடையை நோக்கி சென்றது. எலெக்டிரிக் இயர்த்கேக் இருந்தபடியால் சேதமில்லாமல் தப்பியது. காங்கிரஸ் கொடி மரம் மட்டும் இடி விழுந்தபடியால் கீழே விழுந்தது. சுற்றி கட்டியிருந்த சிமிண்டு கட்டடமும் தகர்ந்து விட்டது. (ஒ-நி)

வேத வித்வத் ஸமாஜம்

சென்னை

விக்ரம வருஷம் வைகாசி மாதம் 26-உ யன்று சென்னை மைலாப்பூர் கபாலீச்வர ஸ்வாமி கோவிலில் மேற்படி ஸமாஜத்தின் கூட்டமொன்று நடைபெற்றது. வேதம் ஒப்புவித்தல் போட்டி நடந்து வெற்றி பெற்றவருக்கு பரிசுகொடுக்கப்பட்டது. மூன்று கனபாடிகள் அன்று ஸம்பாவனை வாங்கினார்கள். விஷ்ணம்பேட்டை ஸ்ரீராம ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் வேத மஹிமையைப்பற்றி பிரஸங்கம் செய்தார்.

அன்று ஸபைக்கு கும்பகோணம் அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதா சாரியர் வந்திருந்தார் அவரும் வேத விஷயமாகவும் வைதிகமத விஷயமாகவும் அநேக அபூர்வ விஷயங்களை விமர்சதோரணையில் எடுத்து பிரஸங்கம் செய்தார்கள். ஸுந்தரமய்யர்
காரியதரிசி

ஸ்ரீ லலிதா
ஸஹஸ்ரநாமம்
நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணா 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—4—0.
தபால் சிலவு அணா 1
கிடைக்குமிடம்.— ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

வில்லிவாக்கத்தில் பஞ்சமர்களின் அட்டகாசம்

கிராமத்தாரின் ஆணித்தரமான பதில் பட்டாசாரியின் உறுதியான கொள்கை.

சென்ற வைகாசிமீ 14உ (27—5—40) திங்கள்கிழமை முதல் கொண்ணூர் என்ற வில்லிவாக்கத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ தாமோதர பெருமாளுக்கு பிரம்ம உத்ஸவம் ஆரம்பமாயிற்று. அன்றைய தினம் இரவு சுவாமி புறப்பாடு ஆனபோது அவ்வூர் சேரியில் இருக்கும் பஞ்சமர்கள் பெருமாளுக்கு தேங்காய், பழம் முதலிய வஸ்துக்களை கொண்டுவந்து அந்த ஸன்னதி அர்ச்சகரான ராமகிருஷ்ணபட்டாசாரியிடம் கொடுக்கவந்து தீபாராதனை செய்யும்படி சொன்னார்கள். ஷை பட்டாசாரியாரும் சாஸ்த்திர விரோதமாகவும் வழக்க விரோதமாகவும் நான் செய்யமுடியாது என்று சொல்லி தண்டைவிட்டு வெளியில் போகும்படியும் சொன்னார் அதற்குள்ளாக கிராமத்தாருக்கு சங்கதிதெரிய எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள் பிறகு அந்த ஸன்னதி தர்மகர்த்தாவான மகா-ராஸ்ரீ நாராயண ரெட்டியார் பிள்ளையும் வந்து தர்மவிரோதமாக எதுவும் செய்யக்கூடாது என்று சொல்லி அவர்களை போகும்படி சொல்ல அதற்கு அவர்கள் அந்த பட்டரையும் தர்மகர்த்தாவையும் கண்டபடி வாயில்வந்தபிரகாரம் திட்ட ஆரம்பித்தார்கள் உடனே அவ்வூர் போலீஸாருக்கு தெரியப்படுத்த அவர்கள் கலைத்து அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் மூன்றுவது நாள் காலை கருடசேர்வை தினம் வந்து தொந்திரவு செய்ய ஆரம்பித்தார்கள். அவ்வூர் பட்டரும் பிரபல ஸநாதனியுமான கிருஷ்ணபட்டாசாரியரும் கட்டுப்பாடாக இருந்து அவர்களிடம்தட்டு வாங்க மறுத்து அவர்களுக்கு வீதியில் சுவாமி தரிசனமே முக்கியமென்றும் உத்ஸவ புறப்பாடுகள் அவர்களுக்காகவே நடக்கிறது என்றும் சொல்லி அனுப்பிவிட்டார்கள். முன் யோஜனையாக அவர்களால் ஏதாவது கலாட்டா நடக்கப்போகிறது என்று அந்த கோவில் ரிஸீவர் அட்வகேட் வெங்கடாசாரிய சுவாமியார் ரிஸர்வ் போலீஸும் தருவித்து வைக்கப்பட்டு இருந்தது.

போலீஸாரின் ஒத்துழைப்பும் கிராமத்தில் கட்டுப்பாடும் பட்டாசாரியின் கண்டிப்பும் தர்மகர்த்தாவின் ஆணித்தரமான பதிலும் கொண்டாட வேண்டியதே. நம் ஸநாதனிகள் எல்லோரும் அவர்களை கொண்டாடி கௌரவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். (ஒ-கி)

மேல்மங்கலம்

மஹா கும்பாபிஷேக வைபவமும் ஆஸ்திக மகாஜன வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க 3-வது வார்ஷிகோத்ஸவ வைபவமும்.

இவ்வூர் மஹா ஜனங்களால் திருப்பணி செய்து புதுபிக்கப்பட்ட ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வராளுக்கும், ஸ்ரீவீரபத்ரஸ்வாமிக்கும் பரிவார தேவதைகளுக்கும் விக்ரம-ஹு வைகாசிமீ 10உ வியாழக்கிழமை கடஸ்தாபனம் செய்து 13உ ஞாயிற்றுக் கிழமை ஸிம்ஹ லக்னத்தில் 11¾ மணிக்கு மஹா கும்பாபிஷேகம் அதிவிமரிசையாய் நடந்தது. நான்கு தினங்களிலும் ருக், யஜுஸ், ஸாமவேத பாராயணங்களும், உபநிஷத், கீதா ராமாயண பாராயணங்களும் சாஸ்திரோக்தமாய் பக்தி சிரத்தையுடன் நடைபெற்றது. நான்கு தினங்களிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் விஜயம் செய்தது போற்றத்தக்கது.

அத்துடன் ஏற்கனவே பத்திரிகையில் அறிவிக்கப்பட்டபடி வைகாசிமீ 10உ வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு இவ்வூர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வராள் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கார கொட்டகையில் திருவையாறு சாஸ்திர ரத்னம் ஸ்ரீவிஸ்வநாத சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் இவ்வூர் ஆஸ்திக மஹாஜன வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் மூன்றுவது வார்ஷி உத்ஸவ வைபவம் சிறப்பாக ஆரம்பமாயிற்று மதுரை பிர்ம்மஸ்ரீ எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள், நல்லூர், சுப்பிரமணிய தீக்ஷதர், முதலிய ஏராளமான பண்டிதர்களும் உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் ஸ்திரீ, புமான்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். சபையின் சார்பில் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் பிர்ம்மஸ்ரீ வி. எஸ். ராமசாமி சாஸ்திரிகள் பி.ஏ.,பி.எல். அவர்களால் ஸ்ரீவிஸ்வநாத சாஸ்திரிகளுக்கு உபசாரப்பத்திரம்வாசித்துகொடுக்கப்பட்டது.

ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள் ஸநாதன தர்மத்தின் உயர்ந்த தத்வங்களையும் வர்ணாஸ்ரம தர்ம தத்வங்களையும் வேத மஹிமையையும் எளிய தமிழ் நடையில் யாவரும் அறியும் வண்ணம் உபன்யாசித்தும். தீண்டாதார் ஆலயபிரவேசத்தைக் கண்டித்தும் ஊர்கள் தோறும் சபைகள் நிறுவ கட்டுப்பாடுடனும், உறுதியுடனும் பிரசாரம் செய்து தீண்டாதார் ஆலயப்ரவேசச் சட்டத்தைத் தகர்க்கவேண்டுமென்றும் பேசினார்கள்.

மறுநாள் 21உ வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு மீண்டும் சபை கூடிற்று. அக்ராசனரவர்கள் வித்யோத் கர்ஷம் பற்றியும் நல்லூர் ஸ்ரீ சுப்பிரமணிய தீக்ஷதரவர்கள் கர்மாவின் மஹிமை பற்றியும், காயத்ரீ வைபவம் பற்றியும் உபன்யசித்தார்கள்.

12உ சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மீண்டும் சபைகூடிற்று. அக்ராஸனரவர்கள் ஸ்திரீ தர்மம், பிரம்ம, க்ஷத்திரிய, வைஸ்ய சூத்ர தர்மங்கள் பற்றியும் உபன்யாசித்து நம்முடைய பிராசீனமான தர்மங்களைக் கைவிட்டதால் இப்பொழுது நாம் துரவஸ்தையில் இருக்கிறோமென்றும் மறுபடியும் பிராசீன தர்மங்களை அனுஷ்டிக்கும் பிராமணர்கள் உபநயன விவாஹ கர்மாவை ஒழுங்காக சாஸ்திர விதிப்படி நடத்த வேண்டுமென்றும் ஆடம்பரமான சிலவுகளை ஒழித்து 4 தினங்களிலும் ஸமிதாதான ஔபாஸனாதி முக்ய கார்யங்களைச் செய்ய வேண்டு மென்றும் ஒருநாள் கல்யாணம் நடத்துவதால் பிராமண்யமே போய் விடுவதுடனும், சந்ததிகளும் பாதித்யத்தை அடைகிறார்களென்றும், தர்ம சாஸ்திர வேதப்ரமாணங்களுடன் யாவரும் அறியும் வண்ணம் உபன்யசித்தார்கள். பின்னர் வி. எஸ் ராமசாமி சாஸ்திரிகள், எம். என். சுப்ரமணிய சாஸ்திரிகள், எம். எஸ். வெங்கட்டராமய்யர் முதலியோர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டுசபையின் வார்ஷிகோத்ஸவம் 12உ சனிக்கிழமை மாலை 6மணிக்கு இனிது நிறைவெய்தியது.

13உ கும்பாபிஷேக தினத்தில் மாலை 6 மணி முதல் இரவு 7½ மணி வரை கும்பகோணம் வித்வான் ஸ்ரீமான் நாகராஜ ராவ் அவர்கள் பில்லாங்குழல் கச்சேரி நடைபெற்றது. (ந-நி)

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க பிரசார கோஷ்டி.

சீர்காழி

1—6—40 இரவு 8மணிக்கு ஷை சங்கத் தலைவர் பிரம்மஸ்ரீ ராவ் சாகிப் என். நடேச அய்யர் அவர்கள் ஸ்ரீஸ்திரஸுந்தரியம்மன் ஆலயமுன் மண்டபத்தில் விஜயமானார்கள். அக்கால் குண்ணம் பிரம்மஸ்ரீ எஸ். சுப்பிரமணியயரவர்கள், ரிடயர்ட் போஸட் மாஸ்டர் டி. கல்யாணராம அய்யரவர்கள் ஸ்ரீ கெ. சி. இராமநாத முதலியாரவர்கள் உ. வே. வித்வான் ஸ்ரீசுந்தராசார்யசுவாமிகள் ஸ்ரீமான் ஸ்ரீ வீ. சதாசிவ முதலியாரவர்கள் இன்னும் அனேக ஆஸ்திக ரத்னங்கள் சுமார் 100 பெயர்கள் வரையில் வந்து கூடினர். ஸநாதன தர்ம வித்யாலய மாணவிகளால் முதலில் கடவுள் வணக்கம் பாடப்பெற்றது. பின்னர் சாரதா சட்டத்தினால் விளையும் தீமைகளும், வரதக்ஷணையினாலும், ஸினிமாவினாலும் உண்டாகும்படியான கெடுதல்களையும் நன்கு விளக்கப்பட்டது. பிறகு ஸ்ரீமான் என். நடேச அய்யரவர்கள் அ. இ. வ. ஸ. சங்க நோக்கங்களையும், தற்காலம் அது செய்து வரும் வேலைகளையும், ஆதிமுதல் நாளது வரையில் காங்கிரஸ் சபையினால் நமக்கு உண்டான நன்மை, தீமைகளையும் நன்கு எடுத்துக் கூறி அதன் பின்னர் ஸ்ரீமான் எ. வைத்தியநாதய்யர் அவர்கள் திருட்டுத்தனமாகச் செய்த அக்கிரமச் செயல்களையும் அவரது துணிகரச் செயல்களையும் விரிவாக எடுத்துப் பேசினார். பிறகு மாஜி மந்திரிகள் இவ்வாறான ஓர் அவசரச்சட்டம் இயற்றாவிடில் ஆலப்பிரவேசம் செய்தவர்களும், செய்விக்கிறவர்களும், உதவினவர்களும் சட்டத்தின் படி தீபாந்திர சிக்ஷையோ அல்லது 5 வருஷம் கடுங்காவலோ அடைத்திருக்குமென்றும் இப்பொழுது நடந்து வரும் O. S. 48/39 கேஸ் விவரமும் பேசியும், அ. இ. வ. ஸ. சங்கத்தினுடைய 5 நிர்மாண திட்டங்களையும் எடுத்துப் பேசியும் ஒரு கிளைச்சங்கமொன்று ஸ்தாபித்து, அதற்கு வித்வத் ஸ்ரீமான் ஸ்ரீ எஸ். சதாசிவ முதலியாரவர்களை பிரசிடெண்டாகவும், ஸ்ரீமான் வித்வான் உ. வே. ஸ்ரீசுந்தராசார்ய சுவாமிகளை வைஸ்பிரஸிடெண்டாகவும், மற்றும் அனேகர்களை மெம்பர்களாகவும் நியமித்து இரவு 9½ மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைக்கப்பட்டது. ந.நி.

ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமி கும்பாபிஷேகம்

சென்னை

சென்னையில் கந்தக் கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கந்தப்பெருமானது திருமாளிகை ஸ்தூபிகளும், ஸ்ரீ ஸுந்தரேசரது ஸ்தூபியும் இராஜ கோபுரமும பிறவும் கிலமாகி மலினமடைந்திருந்தவற்றை திருப்பணி செய்து முடிவுபெற்றிருப்பதால் நாளது விக்ரம-ஹு ஆனி-மீ 3உ 16-6-40 ஆதிவார தினத்தில் காலை 6 மணிக்கு மேல் 7-30 மணிக்குள்ளாக மிதுன லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம நடைபெறும். வைகாசி 23உ முதல் பூர்வாங்கமான வைதிக யாகாதிகள் நடைபெறுமென்று டிரஸ்டிகள் அறிவிக்கின்றனர்.

பரமந்தூர்

அ. இ. வ. சங்கம்

தஞ்சாவூர்ஜில்லா அரந்தாங்கிதாலுகாவிலுள்ள பரமந்தூரில் விக்ரம-ஹு சித்திரை மீ 28உ 10—5—40 அ. இ. வ ஸங்கம் ஒன்று ஆதிகேசவ பெருமாள் கோவிலில் நிறவபெற்றது.

அ. இ. வ. ஸங்கத்தில் கீழே கண்ட நபர்களை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

P. U. ஸ்ரீனிவாஸபட்டாசார். தலைவர் T. S. ராஜமய்யங்கார். காரியதரிசி பொக்கிஷதார் S. கோபாலய்யங்கார். உப. காரியதரிசி R. ஸத்தியமூர்த்தியங்கார் மானேஜிங் மெம்பர்கள், S. வெங்கிட்டராமய்யர், ஷை S. ராமஸாமி பிள்ளை, ஷை K. மாணிக்கம் பிள்ளை. ஷை ஸங்கத்தை ஸ்தாபித்தவர் A. V. சௌரி ராஜன், சிதம்பரம்.

ஸினிமாவிலும் பிராம்மண தூஷணையா?

(பரத்வாஜன். எழுதுவது)
“ சேதாவும் முரளியும் ”

நாம் ஏதாவது கதை சொல்லும் பொழுதோ அல்லது வேறு ஒருவருடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுதோ பிறருக்கு ஆனந்தம் உண்டாக்கவேண்டுமானல், யாராவது ஒருவரைப்பற்றி ஆபாசமாகவோ அல்லது இழிவாகவோ பேசினல்தான் நன்ருகவிருக்கும் இந்த சாதுர்யகவனங்களைக்கேட்டு அவர்களும் மகிழ்ச்சியடைவர்.

இதே கொள்கையைதான் சினிமாப் படங்களைப்பிடிப்பவரும் கையாள் கின்றனர். அவர்கள் தெரிந்து கொண்டுள்ள விஷயம் ஒன்றுண்டு, அதாவது பிராமணர்கள்தான் சாத்விகமானவர்கள்; சிறுபான்மையாகவுள்ளவர்கள்; அவர்களை எவ்வளவு தூஷித்தாலும் அதனல் ஒன்றும் நேரிடாது என்கிறதுதான், இந்த திடமான நம்பிக்கையைக்கொண்டுதான் பொய்யான புராணங்களைக்கற்பித்து, எந்த விதத்திலாவது சாத்விகமாகவுள்ளவர்களைத் தூஷிக்கக்கூடிய சந்தர்ப்பங்களையும் அதிற்புகுத்திப்படம் பிடிக்கிருர்கள். அத்தகையபடங்களிற் தலைசிறந்து இப்போது விளங்குவது (பக்த சேதாவும் சதிமுரளியும்) இவையிரண்டும் தடபுடலான விளம்பரங்களினல் பிறரை பிரமிக்கச்செய்து விட்டனவே யொழிய காரியத்தில் ஒன்றுமில்லை.

ஆனல் ஒன்றுண்டு; இதேபோல் வேறு எந்த சார்பாரையாவது தூஷிக்கும் படம் பிடிக்கப்பட்டால் அதன்கதி ‘ரயதுபிட்டா வென்றும் படம் வெங்கடகிரிசமஸ்தானத்தில் காட்டப்பட்டு ஆனது போல்தான் ஆகும்

நிற்க இவைகளிலுள்ள சில அம்சங்களை கவனிக்குப் புகுந்தால் ஒன்று தோன்றுகிறது. திருடனுக்குத்திருட்டு புத்தி, யென்பது போல் யார் எப்படியிருக்கின்ருரோ அதே போல்தான் பிறரும்இருப்பார் என்று நினைப்பது சிலர் வழக்கம். அதே சந்தர்ப்பந்தான் இந்தப்படங்களிலும் சேர்ந்திருக்க வேண்டும்.

பக்தசேதாவில் ஓர் பிராமணன் செருப்பு வாங்குவதற்குப்பேரம் பேசித்தன்மனைவி மேல் பழிபோடுவது சாதாரண பிராமணர்கள் செய்யும் காரியமில்லை. நவநாகரீகத்தில் நுழைந்து கிளம்பித்தன் மனைவியாருக்கு விசேஷ அதிகாரத்தையும் கொடுத்துத்தான் மாதந்தோறும் வாங்கிவரும் சம்பளத்தையும் அவர்களிடத்திற் கொடுத்து விட்டு சலாம் போடும் நவநாகரீகசீர்திருத்தக்காரர்தான் அப்படிச் செய்வார்களோ என்னமோ? குசேலாவில் பரமபாகவத சிரோமணியாக விளங்கிய ஸ்ரீமான் பாபநாசம் சிவன் அவர்கள் இப்போது பொய்ப்புராண கதையில் தோன்றி பகவானுடைய கிருபையால் எதேஷ்டமான செருப்புகளின் மேல்விழும் போதும், செருப்புகளைக் காவடிகட்டித் தூக்கிக் கொண்டு விற்கும்போதும் சினிமாபார்க்கும் மஹாஜனங்கள் செய்யும் மங்களா சாஸனத்தை அவர் நேரில் கேட்டு ஆனந்திக்காமலிருக்கிருரோயென்றுதான் நினைக்கிரேம் அதிலும் அங்குள்ள தரைமஹாஜனங்கள் டேய்விழுடா செருப்பிமேலே தூக்குடா செருப்பை? யார் ஒன்னை இப்படியாவது காசு சம்பாரிக்கச் சொன்னுங்க? என்று இப்படியெல்லாம் செய்யும் ஆரபாரமும் சொல்லும் துர்ப்பாஷையான பேச்சுகளும் இங்கு எழுதக் கூடியவையாகவில்லை.

கேவலம் திரவியத்திற்கு ஆசைப்பட்டு எவ்விதத்திலும் தன் கவுரவம் குறைவதையும் பொருட்படுத்தாது நடிக்க இசையும் நடிகர்கள் கிடைப்பதனல் தான் படங்களின் கவுரவத்தையே இழக்க நேரிடுகிறது உண்மையிலேயே இப்போதும் அநேக மஹான் அவர்களுடைய வாழ்க்கை, நடை, உடைபாவனையைப்போல் நடித்துக் காட்டக்கூடிய யோஜனையை பகவான் ஏன் இவர்கள் மூளையில் புகுந்த வில்லையோ! ஒரு சமயத்தில் ஓர் நாடகம் உத்தியோகஸ்தரால் நடிக்கப் பட்டது. அது வைதீக விஷயமான ஸம்ஸ்கிருத நாடகம், அதைப் பார்ப்பதற்கு வரும்படியாக எவ்வளவு வேண்டியும் ஒரு பெரியவர் வருவதற்கு மறுத்து விட்டார். அதற்குக் காரணம் கேட்க அவர் வேஷதாரிகளை, முக்கியமாய் ஆண்மக்கள் பெண்மக்களைப் போல் வேஷம் போட்டிருப்பதைப் பார்ப்பது சாஸ்திர விரோதமானது என்று சொன்னர். அப்படியிருக்கையில் இந்த ஆபாச நவீன புராணங்களைப் பார்ப்பது எவ்வளவு சிரேஷ்டமானதாகவிருக்கும்!

சதி முரளியென்றும் படத்தைப்பற்றிச் சிறிது ஆராய்ப்போம்:— இக்ககதையே ஓர் வெறும் புரளியாகத்தான் இருக்குமோவென்று நினைக்க வேண்டியிருக்கிறது. புராணத்தில் கூடச் சீனு என்கிற பெயர் இருந்திருக்குமோ வென்று சந்தேகம். இதில் பிராமணன் அடிமாடு விற்கிற விஷயம் ஒன்று காட்டுகிருர்கள். சாதாரணமாக எந்தப் பிராமணனும் தன்னல் வளர்க்கப்பட்டு வந்த பசுமாட்டை (இருக்கிற லெக்ஷிமியை) ப்பறையனிடத்தில் கிழமாகப் போனவுடன் கொன்று விடுவதற்காக விற்கப்படுவதை நாம் கண்டறியோம். நாகரீகமுள்ள பிராமணரல்லாத மற்ற இந்துககளும்கூட அப்படிச் செய்வதைக் கண்டறிந்ததேயில்லை. ஒரு சமயம் தற்கால நாகரீகத்தில் தேர்ச்சிபெற்றுள்ள சீர்திருத்தக்காரர்கள் தான் டவுன்களில் தங்களுடைய கிழப்பசுவை வைத்துப் போஷிக்க வழி தெரியாமல் சொல்ப கிரயத்திற்குப் பசுக் கொலைக்கி விற்று விடுவார்களோவென்று நினைக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட அபூர்வ விஷயத்தைக் கதையில் ஓர் பிரமாதமாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஒரு சமயம் புராணத்தில் அதை வற்புறுத்திக்காட்டி எழுதியிருக்கிறதோ என்னமோ. இதில் கதாநாயகனுக நடிக்கும் சிறுவன் தக்க வயது வந்த பிறகு தான் தாய் தகப்பனை விட்டுப் பிரித்து வந்து ஓர் பிராமணன் வீட்டில் வளர்ந்து வந்திருக்கிருன். அவனுக்கு எப்படியும் தன் தாய் தகப்பன்மாரின் அடையாளங்கள் ஞாபகமிருக்கும் அப்படி இருக்கையில் அவனுடைய தாயை மூர்ச்சையாகக் கொண்டு வந்து போட்டுக்கிடக்கையில் இவன் போய் தன் மந்திர சக்தியினல் அவனை நினைப்பூட்டிய காலத்தில் அவனையும் மற்றவரையும் இவன் எப்படி அடையாளம் கண்டு கொள்ளாமலிருக்கக்கூடும். இது ஒரு முரண்பாடான விஷயம். இம்மாதிரி இன்னும் எவ்வளவோ அபத்தங்கள் இருக்கின்றன. ஆனல் இந்தப் படம் ஒரு விஷயத்தைக் கற்பித்துக் கொடுக்கிறது. அதாவது முரளியானவள் தன் காதலனிடத்தில் பேசும் சமயங்கள் தான். தாய் தகப்பன் இல்லாத சமயத்தில் எப்படிப் பருவமடைந்த பெண்கள் வேருெருவரிடத்தில் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டுக் காட்டுவதென்கிறது தான். இதை அவசியம் படத்தில் காட்டவேண்டியது தானே. புராணத்தில் அப்படித்தான் எழுதியிருக்கிறது போலும்.

ஏற்கனவே நம்மைக்கண்டு அன்னியர் நகைக்கும் இக்காலத்தில் நம் சுதேச ஜனங்களைப்பற்றியும் வழக்கங்களைப்பற்றியும் தப்பான விஷயங்களைக் கல்பனை செய்து காட்டி படம் பிடித்துப் பணம் சம்பாதிப்பதைவிட சும்மாயிருக்கலாம்?

மதுரையில் ஜய பிரார்த்தனை

இந்த யுத்தத்தில் நமது சக்ரவர்த்திக்கு வெற்றி யேற்படுவதற்காக மதுரை டவுன் வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் ஸனதன தர்ம வித்யாலயத்தில் 26உ யன்று பெரிய பிரார்த்தனை விழா நடைபெற்றது. காலையில் ஸ்ரீபாலமீனம்பிகைக்குப் பூஜையும் ஆதித்ய ஹிருதயபாராயணமும், ஸ்ரீ ராமாயணத்தில் ராவணனை ஜயிக்கும் கட்டமும் பாராயணம் செய்யப்பட்டது.

மாலையில், ருத்ர மந்திரந்துடன் அபிஷேகமும் அர்ச்சனையும் நடத்தப்பட்டது மதுரை காலேஜ் ஸமஸ்கிருத பண்டிதரான பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகளால் கவனம் செய்யப்பட்ட மங்களச்லோகங்கள் படிக்கப்பட்டன. நமது மன்னருக்கு பூர்ண ஜயம் ஏற்பட வேண்டுமென்று மேற்படி சுலோகங்களில் அழகாக குறிப்பிடபட்டிருந்தது.

மாலை 9 மணிக்கு மாஜீ ஸப் ஜட்ஜி ஸ்ரீமான் வெங்கடாசலமய்யர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது 150 வருஷ காலமாக இந்தியாவிற்கும் பிரிடிஷ் மன்னருக்கும் இருந்து வந்த தொடர்பை ஞாபகப்படுத்தி ஹிந்து மத ஸம்பந்தமாக அவர்கள் அனுஷ்டித்து வந்த கொள்கையை மெச்சியும் பிரகிருதயுத்தத்தில் நேசதேச ஸைன்யங்கள் வெற்றி யடைய வேண்டுமென்று பிரார்த்திப்பதாயும், வைதிக ஹிந்துக்கள் ஸ்ரீ மீனுக்ஷிஸுந்தரேசவரர், ஸ்ரீ கூடல்அழகர் போன்ற ஆலயங்களில் பிரார்த்தனை நடத்தமுடியாமல் செய்யப்பட்டிருப்பதை நிவர்த்திக்க வேண்டுமென்று கோரியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன தீர்மானங்கள், ஸ்ரீமான்களான ராவ்பகதூர் நரஸிம்ம அய்யங்கார் அவர்களால்பிரேரேபிக்கப்பட்டும், மாஜீ இஞ்ஜினீயர் பாலமூர்த்தி பந்துலுகாருவால் ஆமோதிக்கப்பட்டும், கருப்பக்கோனர், செல்லம் செட்டியார், முத்துக்குமரஸ்வாமி பிள்ளை ஆகியவர்களால் ஆதரிக்கப்பட்டும் நிறைவேறின. தீர்மானங்களும், மற்ற விவரங்களும் சென்னை கவர்னர் முதலானவர்களுக்கு அனுப்பப்பட்டன. ந.-கி.

மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

‘ஆத்ரேய’

குடும்ப ஔஷதப் பெட்டி,

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

‘ஆத்ரேய’

ஆயுர் வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்
விக்ரம-ஷூ வைகாசி-மீ 31உ

யுத்தமும் இந்தியாவும்.

ஐரோப்பாவின் துரதிருஷ்ட வசமாகத் தோன்றியுள்ள கோரயுத்தமானது நாளுக்கு நாள் மிக நெருக்கடியாக முற்றி வருகிறது. இதன்காரணமாக இந்தியாவில் ஆதாரமற்ற பீதியும், கவலையும் தோன்றிப் பொது ஜனங்கள் கலவரமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக்க அவச்யமானது. இது விஷயமாக கனம் வைஸ்ராய் அவர்களும், மாகாண கவர்னர்களும் தக்க முறையில் தாமஸமின்றி நடவடிக்கை எடுத்து வருவது கொண்டாடத்தக்கது. இச்சமயத்தில் வெகு எளிதாகப் பரவக்கூடிய பொய் வதந்திகளை மறுத்தும் உண்மையை வெளியிட்டும் ஜனங்களை அமைதியாயிருக்கும்படி செய்யவேண்டியது மிக்க அவச்யமாகும். இதற்கு கவர்மெண்டும் பொது ஜனங்களும் பரஸ்பரம் ஒத்துழைக்கவேண்டியது மிக அவச்யமானது. இதை உணர்ந்து கனம் வைஸ்ராய், ஒவ்வொரு நகரத்திலும் யுத்த ஸப் கமிட்டிகளை ஏற்படுத்தி பொது ஜன பிரமுகர்களைக் கலந்து கார்யம் செய்யமுன் வந்திருக்கிறார். இதன் மூலம் விசேஷ பிரயோஜனம் ஏற்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

யுத்தமானது ஆயிரக்கணக்கான மயிலுக்கு அப்பால் நடந்துவந்த போதிலும், அதனால் இந்தியாவுக்கும் ஆபத்து வந்துவிடுமோ வென்று சிலர் சங்கித்துப்பயமுறுகிறார்கள். உண்மையில் இந்த பீதிக்கு இடமேயில்லை. எதிரிகள் இந்தியாமீது படையெடுப்பார்களென்பது ஸ்வப்னத்திலும் நினைக்கக்கூடியதல்ல. எதிரிகளின் முக்ய நோக்கமும் அதுவல்ல. ஐரோப்பாவில் ஆதிக்யம் பெறும் நோக்கத்துடனேயே ஹிட்லர் யுத்தத்தைத்துடங்கியிருக்கிறார்.

மேலும் எதிரிகளால் ஏதாவது சில்லரைத் தொந்திரவுகள் ஏற்பட்டாலும் அவைகளை ஸமாளித்துக்கொள்ள இந்தியாகவர்மெண்டார் தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஆகாசயானமோ, யுத்தக்கப்பலோ, காலாட்படையோ எளிதாக இத்தியாவிற்கு வந்து தாக்கிவிட முடியாது. ஆதலால் இந்த யுத்தம் இந்தியாவிற்கும் வந்து விடுமென்று ஒருவரும் பயப்படக்காரணமில்லை.

தவிரவும் இந்தியா கவர்ன்மெண்டார் இந்த யுத்தத்தினால் பொதுஜனங்களுக்கு எவ்வழியிலும் சிறிது கூட அஸௌகர்யம் ஏற்படக்கூடாதென்று நினைத்துத்தக்க முன்னேற்பாடுகளைச் செய்திருப்பதையும் பொதுஜனங்கள் கவனிக்கவேணும். சென்ற மஹாயுத்தத்தின் போது உணவுப் பொருள் முதலிய பண்டங்களின் விலை வெகுவாக அதிகரித்து ஜனங்கள் கஷ்டப்படவும், சில சுயநலக்காரர்கள் கொள்ளை லாபமடைவும் நேர்ந்தது. இப்போதிய யுத்தத்திலோ வென்றால் ஸர்க்கார் முன்னெச்சரிக்கையாயிருந்து பண்டங்களின் விலை கண்மூடித்தனமாக அதிகரிக்காமல் பாதுகாப்புச்செய்து கொடுத்திருக்கிறார்கள்.

இக்கார்யத்தை அவர்கள் செய்துகொடுத்திராவிடில் யுத்த சிரமமே தெரியாமல் ஜனங்கள் ஸுகமாக இப்போது காலம் கழிப்பது ஸாத்யமாயிருக்காது. பல மாத காலமாக இந்த யுத்தம் நடந்து வரினும் இந்தியாவில் உணவுப் பண்ட விலையேற்றத்தால் ஜனங்கள் கஷ்டபட நேரவில்லையென்பது நிதர்சனமாயிருக்கிறது.

மேலும் கவர்ன்மெண்டார் பொது ஜனங்களுக்கு வேண்டியவளவு பணப்புழக்கம் ஏற்படுவதற்கும் வகை செய்து கொடுத்திருகிறார்கள். இவ்வளவு முன்னேற்பாடு செய்பட்டிருப்பதால் தான் மற்ற தேசங்களைவிட இந்தியாவானது கூடிய வரையில் இன்று அமைதியாகக்காலம் தள்ள முடிந்திருக்கிறது. இந்த உண்மையைப்பொது ஜனங்கள் உணர்வது அவச்யம்.

ஆதலால் சிலவிஷமிகளும், விஷயமறியாத பாமரர்களும் கிளப்பி விடும் பொய் வதந்திகளை நம்பி பொது ஜனங்கள் வீண் கலவரம் அடையக்கூடாதென்று கனம் வைஸ்ராய் கேட்டுக்கொள்ளுகிறார். பொய்களை மறுத்து உண்மை நிலைமையை வெளியிட்டு ஜனங்களை அமைதியாகவாழும்படி செய்யவே யுத்த ஸப் கமிட்டிகளை அங்காங்கு அவர் அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறார். இந்த முயற்சியில் பொது ஜனங்கள் ஸர்க்காரோடு தீவ்ரமாக ஒத்துழைக்க வேண்டியது அவச்யமாகும். இந்த நெருக்கடி ஸந்தர்ப்பத்தில் ராஜீயக்கக்ஷிகளுக்கு இருந்துவரும் அதிருப்தியைக்கூட மறந்து அவை ஸர்க்காருடன் ஒத்துழைக்க முன்வந்திருக்கின்றன.

ஆங்கிலேயர்கள் ஸாதரணகாலத்தில் நம்மை லக்ஷ்யம் செய்யாமல், இப்போது தங்களுக்கு ஆபத்து நேர்ந்தபோது தானே நம்மை நேசிக்கிறார்கள்,, என்று நினைப்பவர் சிலர் இருக்கலாம். ஆங்கிலேயர் நமது ஸ்வதந்திர உரிமையை ஒப்புக்கொள்ளவில்லையே,, என்று வேறு சிலர் வாதிக்கக்கூடும் ஆயினும் நல்லவேளையாக மேற்கண்ட உணர்ச்சி உள்ளவர்களும்கூட வைஸ்ராய் வேண்டுகோளுக்கு இணங்கி வந்திருப்பது ஸந்தோஷிக்கத்தக்கது.

ஹிந்துக்களுடைய மதப்படி அரசன் தெய்வாம்சம் பொருந்தியவன். தேசத்தில் ராஜநீதியும், ராஜதர்மமும் நிலைத்திருக்க வேண்டும். தண்டாதிகாரத்துக்குக் குறைவு ஏற்பட்டால் வல்லான் வகுத்ததே சட்டமாகி பிரஜைகளின் உரிமை பாழாகிவிடும். அராஜகமே ஏற்படும். அராஜகத்தை வைதிகஹிந்து மதம் வெறுக்கிறது. ஆதலால் ஏற்கனவே இந்தியாவில் நிலைத்துள்ள ஒரு நிலைமை மாறி கொடியபுதிய ராஜ்ய நிலைமை ஏற்பட ஹிந்துக்களின் மனமும், ஸ்வரூப ஸ்வபாவதிகளும் சிறிதும் இடம் கொடுக்கக்கூடியவையல்ல வென்பதும் இச்சமயம் ஞாபகத்திற்கு வரவேண்டியதவச்யமாகும்.

அறிவிப்பு

மதுரையில் நமது ஏஜண்டாக இருந்த ஸ்ரீமான் ஜி. ஏ. விஸ்வநாத சாஸ்த்ரிகள் இனி எங்களுக்கு மதுரையில் ஏஜண்டாக இல்லை. மதுரையிலுள்ள சந்தாதாரர்கள் தங்கள் சந்தாதுகையை நேராக நமது ஆபீஸிற்கே அனுப்பும்படி கோருகிறோம்.

மானேஜர்.

கூட்டுக்கக்ஷி கவர்ன்மெண்ட் ஸி. ஆர். ஸம்மதம்?

அம்பாசமுத்திரத்தில் நடந்த திருநெல்வேலி ராஜீய மஹாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் தற்கால நெருக்கடியைத் தீர்க்கக் கீழ்க்கண்ட ஆலோசனையைக் கூறிப்பேசியதாவது:—

“மாகாண, மத்ய ஸர்க்கார்களை பொறுப்பு வாய்ந்ததாயும், பிரதிநிதித்வம் பெற்றதாயும் அமைப்பது தற்போதிய நிலைமைக்கு மிகவும் ஏற்றது என நான் நம்புகிறேன். இம்மாதிரியான நெருக்கடி ஸமயங்களில் எல்லா கக்ஷிப்ரதிநிதிகளும் கொண்ட தேசிய ஸர்க்கார் அமைக்கப்பட வேணுமென்றும் சிலர் கூறுகின்றனர்.

கக்ஷி முறை கவர்மெண்டுக்குப்பதிலாக நாஷனல் கவர்மெண்டு அமைப்பதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை,,

ஸ்ரீ ஸுபாஷ் சந்திர போஸும், கூட்டுக்கக்ஷி கவர்ன்பெண்ட் ஏற்படுவதை ஆதரிக்கிறாராம்.

பொய்வதந்திகளைப்பரப்பக்கூடாது. தண்டனை விதிக்கப்படும்

சென்னை கவர்மெண்ட் எச்சரிக்கை

சென்னை கவர்மெண்டார் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், யுத்தவிஷயமாக விஷமமாகவும், பொய்யாயும் வதந்திகளைப் பேசக்கூடாதென்றும், பரப்பக்கூடாதென்றும், அப்படிச் செய்பவர்களை உடனே அரஸ்ட் செய்யப்படுமென்றும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

ஈ. வி. ரா. ஏமாற்றம்

திருநெல்வேலி தமிழர் கூட்டத்தில் சு-ம-தலைவர் ஈ. வி. ரா. பேசுகையில், ஜஸ்டிஸ் கக்ஷியார் கட்டுப்பாடாக இல்லாததையும், தமக்கு ஆதரவு அளிக்காமல் அலக்ஷ்யமாயிருப்பதையும், தமது கக்ஷிக்கு எலெக்ஷனில் தோல்வி ஏற்பட்டு வருவதையும் வருத்தத்துடனும் ஏமாற்றத்துடனும் குறிப்பிட்டு, தற்காலம் காங்கிரஸ்தான் கட்டுப்பாடான ஓர் சிறந்த செல்வாக்குள்ள ராஜீய ஸபை என்பதை பட்டவர்த்தனமாக ஒப்புக்கொண்டாராம்.

சட்டஸபை மெம்பர் சம்பளம் நிறுத்தப்பட்டது.

சென்னை கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், சென்னை சட்டஸபை மெம்பர்களுக்குக் கொடுபட்டு வந்த 75ரூ சம்பளத்தை இனி நிறுத்திவிட்டதாகக் கூறியிருக்கிறார்கள்.

மெம்பர்களுக்கு தற்போது சட்டஸபை வேலை இல்லாததாலும், ஸமீபத்தில் மீண்டும் சட்டஸபை கூடுமென்ற நம்பிக்கையில்லாததாலும் 93வது பிரிவுப்படி கவர்னர் ஆக்ஷி நீடிக்கப்பட்டு விட்டதாலும் சம்பளம் நிறுத்தப்பட்டதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் ஆத்திரப்படுகிறார்கள்.

குறிப்புகள்

புதிய கவர்னரின் புத்திப்போக்கு

ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்யவோ, நிறுத்திவைக்கவோ முடியாதென்றும், ஆதலால் அவ்விஷயமாக ஸனாதனிதூது கோஷ்டியை ஸந்தித்து பேசமுடியாதென்றும், சென்னை புதிய கவர்னர் சொல்லியுள்ளதை நம்மவர்கள் கவனித்திருப்பார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது.

ஜனநாயக சட்டசபை செய்த பல காரியங்களை கவர்னர்கவிழ்த்துவிட்டிருக்கையில் மிகவும் ஆக்ஷேபகரமானதென்று கவர்ன்மெண்டாலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த சட்டத்தை மட்டும் ரத்து செய்ய மறுப்பதற்கு நியாயமான காரணமில்லை. வாய் உள்ளவர்களுக்கே இது காலம். ஸாத்விகர்களை லக்ஷ்யம் செய்வாரில்லை. இந்த நியாயம் தான் வெளிப்பட்டது!

ஸனாதனிகள் தீவ்ர வழியில் இறங்கினாலல்லது இவர்களுடைய வேண்டுகோள் பயன்படப் போவதில்லை. எதிலும் ஒதுங்கியோடும் மனப்போக்குள்ள நமக்கு தீவ்ர வழிகளில் இறங்க அவகாசமேது? ஒற்றுமையேது?

அதிலும் இப்போது யுத்த ஸமயத்தில் நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. இவ்வளவு தெரிந்திருந்தும் அடிக்கடி கவர்ன்மெண்டிடம் தூதுபோவதில் பயனென்ன? நிலைமையைக்கேவலமாக்குவது தான் மிச்சமாகும்?

உண்மை வெளியாகிவிட்டது!

ஆயினும் ஆலயப்பிரவேச விஷயமாகச் சில உண்மைகள் வெளிப்பட்டுவிட்டது நல்லதே. காங்கிரஸ் விஷமிகள் தவிர வேறு எந்தப்பொது ஜனங்களும் ஆலயப்பிரவேசம் வேண்டவில்லை யென்பது இப்போது வெளியாகிவிட்டது. காங்கிரஸ்ஆக்ஷி காலத்தில் இருந்த ஆலயப்பிரவேச கூச்சல் இப்போது எங்கே? இதைப்பற்றிய பேச்சும் எண்ணமும் பறந்தே போய்விட்டது. புதிதாக ஒரு கோவிலிலும் ஆலயப்பிரவேசம் நடக்கவில்லை. நடத்தமுடியவில்லை. டிரஸ்டிகளோ,பொதுஜனங்களோ, தீண்டாதாரோ எங்கும் ஆலயப்பிரவேசம் கேட்டதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் ஆக்ஷி மறைந்த காலம் முதலாக இன்று வரையில் ஒரு கோவில் அதிகாரி கூட இதற்கு முன் வராததிலிருந்து எங்கும் ஆலயப்பிரவேசம் வேண்டப்படுவதாக காங்கிரஸ் வாலாக்கள் பேசி வந்தது பொய் பிரசாரமென்பது வெளியாகிவிட்டது.

ஸத்யமூர்த்தியின் பரிதாபமே ருஜு!

மேலும் மதுரை ஆலயப்பிரவேசத்தால் காங்கிரஸ் மனோரதம் நிறைவேறவில்லை யென்ற உண்மையும் வெளிப்பட்டுவிட்டது. தென்னிந்தியாவில் ஆலயபிரவேச எதிர்கிளர்ச்சி அடங்கிவிட்டதாயும் எல்லோரும் ஆலயபிரவேசத்திற்கு இணங்கிவிட்டதாயும் படேல் பெருமை பேசினார் ஆனால் வ. வைத்தினாதரும், ஸத்யமூர்த்தியும் ஓலமிடுவதை அவர் கவனித்தால் உண்மை அறியலாம். மதுரையில் ஆஸ்திக ஹிந்துக்களும், முக்யமாக பிராம்மணர்களும் கோவிலை பஹிஷ்கரித்து விட்ட உண்மையை மேற்படி இருவரும் ஒளிம்மறைவின்றி ஒப்புக்கொண்டிருக்கிறார்களே? ஸனாதனிகளெல்லோரும் இனிமேல் மீனாக்ஷி கோவிலுக்குப் போகவேண்டுமென்று வ. வைத்தினாதர் ஒவ்வொரு கூட்டத்திலும் ஓலமிடுவதேன்?

ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி சில நாட்களுக்கு முன் மதுரையில் பட்ட வர்த்தனமாகப் பேசியிருப்பதைப் பாருங்கள்:—

"நான் ஸந்தியாவந்தனம், காயத்ரீஜபம் செய்கிறேன். ஆலயப்பிரவேசம் நடந்ததால் கோவிலில் யாதொரு மாறுதலையும் காணவில்லை. தெய்வஸான்னித்யம் அப்படியேதானிருக்கிறது.

ஸனாதன ஸகோதரர்கள் மீனாக்ஷி கோவிலுக்குப்போகும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுரை பிராம்மணர்கள் இந்தக்கோவிலுக்குப் போக மறுத்தால், நான் என் மனைவியுடன் மதுரையில் ஒருமாதம் தங்கி பிராம்மணர்களைக் கோவிலுக்கு அழைத்துச் செல்ல முயற்சிப்பேன்"

இவ்வாறு ஸ்ரீ ஸத்யமூர்த்தி பேசியிருப்பதிலிருந்து ஸனாதனிகளின் பஹிஷ்காரமானது அங்கு வெற்றிகரமாக ஊன்றி நிற்பதும், அதனால் காந்தி சிஷ்யர்கள் ஏமாற்றமடைந்திருப்பதும் வெட்ட வெளிச்சமாகி விட்டதே?

பஹிஷ்கார வெற்றிக்கு இதை விடவேறு என்ன ருஜு வேண்டும்? தீண்டாமையை ஒப்பாத சீர்திருத்தவாதிகளே மதுரை கோவிலுக்குப்போகிறார்கள், தீண்டாமையை ஜாதிதர்மமாக ஆதரிக்கும் வைதிக ஹிந்துக்கள் அங்கு அசுத்த கோவில்களை பஹிஷ்கரித்து விட்டார்கள். இது தான் உண்மை நிலை. தீண்டாமை விலகிவிட்டதா?

ஸ்ரீ ஸத்யமூர்த்தியின் மேற்கண்ட பேச்சிலுள்ள சில வேடிக்கைகளை இச்சமயம் கவனிக்கவேணும். தாம் ஒரு ஸனாதனியென்றும், ஸந்தியாவந்தனி யென்றும் சொல்லிக்கொள்ளுகிறார். இந்த ரிஷியைப்பின் பற்றி எல்ல ஸனாதனிகளும் கோவிலுக்கு வந்துவிடுவார்களென்று கருத்தோ? காந்தியும், ஸி. ஆரும்கூட ஸனாதனிகளென்று சொல்லிக்கொள்ளவில்லையா? ஸான்னித்யம் அப்படியேயிருப்பதாக இவர் கூறுகிறார். எப்படி அறிந்தாரோ தெரியவில்லை. ஸான்னித்யம் வருவதையும், போவதையும் அறியக்கூடிய யோகசக்தி நமது ஸத்தியமூர்த்திக்கு இருப்பதை இதுவரை ஒருவரும் அறியாமல் ஏமாந்து போய்விட்டார்கள்! இனி இவர் ஒருகலியுக ஆகமம் கற்பிக்கலாம். வைதிகர்கள் நம்பும் பழைய ஆகமங்களின்படி, தெய்வசக்தி வருவதும், அழிவதும் சாஸ்திரத்தினாலேயே அறியக்கூடியதேயல்லது பிரத்யக்ஷமல்லவென்றல்லவோ சொல்லப்படுகிறது. ஸ்ரீ ஸத்யமூர்த்தியும் அவரது மனவியாரும் வீடுவீடாக ஸத்யாக்ரஹம் செய்து பிராம்மணர்களை மீனாக்ஷி கோவிலுக்கு அழைத்துப்போவார்கள் போலும்?

மீனாக்ஷி கோவிலை மீட்பதெப்படி?

இதற்கு வழிதேடவேண்டிய தவச்யமே. பலவித யோஜனைகள் கூறப்படுகின்றன. பஹிஷ்காரத்தை பலப்படுத்தினால் நல்ல பலன் உண்டு. ஸ்ரீங்கேரி, காமகோடி, அஹோபிலம், நாங்குனேரி, மடாதிபதிகளும், ஆஸ்திக சைவமடாதிபதிகளும் சேர்ந்தாப்போல் மதுரைக்குப்போய் சில காலம் முகாம் செய்யவேணும். தெய்வ ஸான்னித்யம் போய்விட்டதை பொது ஜனங்களிடம் அவர்கள் வெளியிட்டு பஹிஷ்காரத்தை பலப்படுதவேணும் இப்படிச்செய்தால் பல்லாயிரக்கணக்கானவர்கள் கட்டுப்படுவார்கள். மதில் பூனையாயிருப்பவர்களும் திரும்புவார்கள். பூஜாசாரியர்களும் புத்தி பெறுவார்கள். கோவில் பாழடையும். எதிரிகள் நடுங்குவார்கள். தக்கவழி பிறக்கும். மடாதிபதிகள் உடனே மதுரை நோக்கிப்புறப்படவேண்டியது தான். பலன் நிச்சயம். மடாதிபதிகள் கவனிக்கவேண்டிய பெருத்த மத ஆபத்து இதைத்தவிர வேறு என்ன இருக்கிறது? இதைத்தவிர இப்போது ஸப்கோர்ட்டில் நடக்கும் கேஸை பலப்படுத்தி ஹைகோர்ட் பெடரல் கோர்ட், பிரிவி கௌன்ஸில் வரையில் போகவேணும், பம்பாயில் மதுவிலக்கு உத்திரவின் கதி என்னவாயிற்று? அதுபோல் ஆலயப்பிரவேச சட்டமும் ஆகுமென்பதற்கு ஸப்கோர்ட்டிலேயே அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. இதுபோல் இன்னும் சில வழிகளும் மீனாக்ஷி கோவிலை மீட்கக் கூடியவை இருக்கின்றன ஸனாதனிகள் கட்டுப்பாடாயிருந்தால் எதையும் ஸாதிக்கலாம்.

ஸ்திரீகளுக்கு உத்யோகம். புதிய ஆபத்து

சென்னை கவர்மெண்டார், டெலிபோன், டைப் வேலைகளில் ஸ்திரீகளுக்கு உத்யோகம் கொடுக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். நவீன நாகரீகத்தால் ஸ்திரீகளும் குடும்பங்களும் சிரிப்பாணியடைந்துசிற்கையில் இந்த உத்திரவு இன்னும் பல விபரீதங்களையே விளைவிக்கும்.

புருஷர்களிலேயே வண்ணக்கற்றவர்கள் வீடு, வாசல்களை விற்றுப் படித்து பிச்சைக்கார நிலைமையில் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தத்தளித்துக்கொண்டு இருக்கையில் இந்த உத்திரவு அந்த திண்டாட்டத்தை அதிகரிக்கச் செய்யுமல்லவா? ஏன் இந்தப் புதிய போட்டிக் கஷ்டம்? ஸ்திரீகளுக்கு கொடுப்பதாகச் சொல்லும் வேலைகளை புருஷர்களுக்குக் கொடுத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையுமல்லவா? ஸ்திரீகள் அதிகம் படித்துவிட்டு அவர்களும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவிக்க வேணுமா? வகுப்புவாரிப் போட்டி போதாதா? ஸ்திரீகள் போட்டியும் வேண்டுமா?

விதவைகளுக்கும், விவாஹமாகாதவர்களுக்கும்தான் மேற்படி உத்யோகம் கொடுக்கப்படுமென்றும், விவாஹம் செய்துகொண்டவர்கள் உடனே உத்யோகத்தை விட்டு நீக்கப்படுவார்களென்றும் அந்த உத்திரவு கூறுகிறது. ஹிந்து விவாஹ தர்மங்கள் பல வழியால் கெட்டுப் போய்விட்டது போதாதென்று இந்த உத்திரவும் தோன்றியது போலும்? இப்போதே அனேக ஸ்திரீகள் விவாஹம் வேண்டாமென்கிறார்கள். இனி உத்யோக ஆசையால் விவாஹத்தை வெறுக்கும் வழக்கம் அதிகரித்துவிடும். சோர நட்பும், திருட்டு பிரஸவமும் ஜாஸ்தியாகலாம். விவாஹம் செய்துகொண்டவர்கள்கூட விதவைகளாகிவிட ஆசைப்படலாம். விதவா விவாஹப் பேச்சும் மறைந்துவிடும் போலும்? விவாஹத்தைவிட உத்யோகமே பெரிதல்லவா? இன்னும் பல வேடிக்கைகள் நடக்கும். மேற்கண்டவாறு கவர்ன்மெண்டார் கண்டிஷன் செய்திருப்பது மிகவும் அபாயமானது. இதை யாவரும் எங்கும் பலமாகக்கண்டிக்கவேணும்.

ஆர்ய திராவிட விவாதம்
டாக்டர் நாயுடு கண்டனம்

பிரிவினையால் எதிரிகள் நன்மையடைவார்கள்

7உ யன்று சென்னை கடற்கரையில் நடந்த ஹிந்து மகாஸபைக்கூட்டமொன்றில் டாக்டர் பி. வரதாராஜுலுநாயுடு தலைமை வகித்துப் பேசுகையில், யுத்தத்தில் இங்கிலாந்து ஜயிக்கவேண்டிய அவச்யத்தைப்பற்றிப் பேசிவிட்டு சென்னை மாகாணத்தில் நடக்கும் ஆர்யதிராவிட பிரிவினையைப்பற்றி அவர் சொன்னதாவது:—

"இந்த பிரிவினையானது மிகவும் தீமையை உண்டாக்கும். ஹிந்துக்களை ஒழிக்க நமது எதிரிகள் பூர்ணமாக இந்தக்கூச்சலை உபயோகித்துக் கொள்ளுகின்றனர். திராவிடதேச பிரிவினை போன்ற விஷமபிரசாரத்தை கவர்ன்மெண்டார் இடனே தடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஆர்யர்களுள் ஜாதி வித்யாஸக் கொடுமை இல்லையென்று நான் சோல்வேன். ஸ்திரீகளுக்கு ஆர்யர்கள் ஸமஅந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள்.

ஆர்யர்கள் எங்கும் இருக்கின்றனர் திராவிடப்பிரிவினை மூலம் ஹிந்து மதத்தைப் பிரிக்க முயல்வது மிகவும் அசட்டுத்தனமாகும்.

இதாலியும் யுத்தத்தில் இறங்கியது

நேசதேசங்களுக்கு விரோதமாயும், ஜர்மனிக்கு ஸாதகமாயும் இத்தாலி தேசமானது ய...த்தில் இறங்கி விட்டதாக நிச்சயமான செய்தி வெளியாகியிருக்கிறது.

இந்தியா சட்டஸபை கெடு ஒரு வருஷம் நீடிக்கப்பட்டது

டெல்லி இந்தியா சட்ட ஸபையின் காலகெடுவானது அடுத்த அக்டோபருடன் முடிந்து விடுகிறதாகையால் அதன் ஆயுளை இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடித்திருப்பதாக வைஸ்ராய் அறிவித்திருக்கிறார். இந்த நீடிப்பு நாலாவது தடவையாகும்.

காங்கிரஸ் பதவி ஏற்காது. தலைவரின் விளக்கம்

காங்கிரஸ் பிரதம மந்திரிகள் கூடி சீக்கிரத்தில் மீண்டும் மந்திரி பதவி ஏற்க வழி தேடப்போவதாக ஓர் வதந்தி கிளம்பியது. இதன் பேரில் காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆஸாத் இதைப் பற்றி ஒரு மறுப்பு வெளியிட்டிருக்கிறார்.

'தற்போது உள்ள நிலைமையில் காங்கிரஸானது மீண்டும் மந்திரி பதவியை ஏற்கக் கூடாதென்று கார்யக் கமிட்டி தீர்மானித்திருப்பதால் காங்கிரஸ்காரர் மந்திரி பதவி ஏற்க யோஜனை செய்வதாகக் கூறுவது ஆதாரமற்றது' என அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

சென்னை மாகாணத்தில் ரஸ்தா விபத்துக்கள்

சென்னை மாகாணத்தில் 1939-ம் வருஷத்து கடைசி கால் வருடத்தில் ஏற்பட்ட ரஸ்தா விபத்துக்கள் ஸம்பந்தமான புள்ளி விபரங்கள் பின்வருமாறு சர்க்கார் வெளியிடுகிறார்கள்.

பிரஸ்தாப கால் வருடத்தில் ஏற்பட்ட விபத்துக்கள் 292; இறந்தவர்கள் 57; காயமடைந்தவர்கள் 354. இதற்கு முந்திய கால் வருடத்தில் ஏற்பட்ட விபத்துக்கள் 380; இறந்தவர்கள் 46; காயமடைந்தவர்கள் 352. 2-வது கால் வருடத்தில் விபத்துக்கள் 315.

விபத்துக் குள்ளானவைகளில் பிளஷர் கார்கள் 131; பஸ்ஸுகள் 96; மாட்டு வண்டிகள் 87; சைக்கிள்கள் 33; லாரிகள் 30; குதிரை வண்டிகள் 13.

131 விபத்துக்கள் பாதசாரிகளாலும், 88 டிரைவர்களாலும், 22 சைக்கிள் ஓட்டிகளாலும், 16 மிருகங்களாலும் சம்பவித்தன.

மாகாணத்தில் மொத்தம் ஓடிக்கொண்டிருந்த (அதாவது வரிக்கட்டியவைகள்) மோட்டார்வண்டிகள் 20.250 இவைகளில் 6,251 சென்னை நகரில் ஓடிக்கொண்டிருந்தன.

இறந்தவர் 1937 நகர்—26 சுற்றுப்புறம் 320. 1938 —25 சுற்றுபுறம் 300. 1939 33 சுற்றுப்புற 251 காயமுற்றவர் 1937- நகர் 55 சுற்றுப்புறம் 1610. 1938. 102, 1,711. 1939- 91, 1,442.

ஸம்புரோக்ஷணம் நடத்தப்பட்டது ஆழ்வார்திருநகரி

ஆழ்வார் திருநகரி கோயிலில் வைகாசி மகோத்ஸவம் 6ம் திருநாளன்று 17-5-40 மாலை ஆலயத்தினுள் ஓர் ஹரிஜன் (தீண்டாதவர்) பிரவேசம்செய்து தேங்காய் பழம் வகையறுவுடன் நின்றுகொண்டிருக்கையில் சிலர் சந்தேகித்து விசாரித்ததில் உண்மை தெரிந்ததாயும் அதன்மேல் தேவஸ்தன எக்ஸிகூடிவ் ஆபீஸர் விசாரணைசெய்து போலீஸில் ஒப்படைத்ததாயும் தெரிகிறது. சம்புரோக்ஷணச் செலவு வகைக்காகவும் அபராதமாகவும் ஹரிஜனிடம் கோயில் நிர்வாஹ ஆபீஸரால் பணம் வாங்கப்பட்டதாயும் சொல்லப்படுகிறது. அன்று சம்புரோக்ஷணம் வகையரு சிறப்பாக ஆபீஸரால் நடத்திவைக்கப்பட்டது. மாலை 5மணிக்கு நடைபெறவேண்டிய ஸ்வாமி வீதிப் புறப்பாடு இரவு 12½க்கு நடைபெற்றது. தீண்டாதார் பிரவேச சம்புரோக்ஷண தாமதம் காரணமாய் 7ந்திருநாள் பகல் 12மணி வரை 6ம் உத்ஸவ நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்தன. ஆலயத்துள் வந்த நபர் தனது மனைவியை கோயிலுக்கு வெளியிருக்கச் சொல்லிவிட்டு தான்மட்டும் கோவுக்குள் சென்றிருந்ததாய்க் கூறப்படுகிறது. வேண்டுமென்றே உள்பிரவேசித்ததாய் கூறப்படும் மேற்படியார் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமெனவும் சொல்லப்படுகிறது. (க.கி.)

ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமம்

மூலம் நாகரத்திலும், தமிழிலும், ஸ்ரீமான் G.V,கணேசய்யர், B.A.,B.L., எழுதியது.

ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கரராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷ ச்லோகங்கள் முதலியன அடங்கியவை

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4] [தபால் V. P. P. செலவு தனி கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சு கூடம், லிமிடெட், கும்பகோணம்.

மதிப்புரை

"ஆலயப்பிரவேசம்" ஓர் ஸம்பாஷணை புஸ்தகம்

சுமார் ஒரு வருஷகாலமாகத் தென்னிந்தியாவில் ஆலயப்பிரவேச அமளி நடந்து வருகிறது சீர்திருத்தக்காரர்கள் ஆலயப் பிரவேசத்தைத்தாக்கிப் பேசுகையில், பற்பலவித குயுக்திகளையும், போலி நியாயங்களையும், அஸம்பந்தமான சாஸ்திரபிரமாணத்தையும் காட்டிப் பாமரர்களை ஏமாற்றி வருவதைப் பத்திரிகைகளில் பாராதவர் இருக்கமாட்டார் அவர்களுடைய குதர்க்க வாதங்களைக்கண்டித்து தகுந்த யுக்தி, நியாய, பிரமாணங்களுடன் அவைகளைத் தகர்த்தெறியத்தக்க கக்ஷிகளடங்கிய புஸ்தகம் இது ஒன்றுதான், ஸநாதநிகளின் கக்ஷிகள்யாவும் கூடியவரையில் இப்புஸ்தகத்தில் ஒன்று சேர்த்து எழுதப்பட்டிருக்கின்றன. இது எதிர்கக்ஷியாருடைய மயக்கத்தை அல்லது பிடிவாதத்தை தடுக்கக்கூடியாதயிருப்பதுடன், ஸநாதந தர்ம உண்மையை அறிந்துகொள்ளவிருப்பமுள்ளவர்களுக்கும் மிக்க உபயோகப் படக்கூடியது. சாதுர் வர்ணத்தில் சேராதவர்களுக்கு தேவாலயப்பிரவேசம் அநுசிதமென்றும் அசாஸ்திரீயமென்றும் இதில் நிரூபிக்கப்பட்டிருப்பதுடன், ஜாதி வ்யஸ்தை நியமத்தை உறுதிப்படுத்தியும் எழுதப்பட்டிருக்கிறது. இதோடு ருதுமதி விவாஹம் போன்ற அதர்மங்களும் கண்டிக்கப்பட்டிருக்கின்றன சுமார் 92 முக்ய விஷயங்கள் விவாதித்து நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இப்புஸ்தகம் ஸம்பாஷணைரூபமாக எளியதமிழில் எழுதப்பட்டுள்ளது.

ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்களுடைய அநுக்ரஹ ஸ்ரீ முகமும், மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ், ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களுடைய சிறந்த முகவுரையும் ஸ்ரீமான் வி. எஸ். ராமநாத சாஸ்திரிகளுடைய அபிநந்தன பத்திரமும் இப்புஸ்தகத்தின் சிறப்பை விளக்கக் கூடியன. இதை எழுதிய ஸ்ரீமான் கண்டமங்கலம் சுப்பிரமணிய அய்யருடைய முயற்சியை பாராட்டுகிறோம். இதையாவரும் ஆதரிப்பது அவச்யம். விலை அணு 6 மைலாப்பூர் 10 பிலாத்தோப்பு என்ற விலாஸத்தில் ஆசிரியரிடம் கிடைக்கும்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்.)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர், தர்மசாஸ்திரச் சுருக்கம், கீழவிடையல், திருச்சிரை

வே. வோ. சர்மாவின் பிரசுரங்கள்.

சங்கரோபதேசம்	2	0	0
பத்ம புராணம்	0	12	0
மார்கண்டேய புராணம்	0	6	0
வாமந புராணம்	0	6	0
வைகுண்ட ஏகாதசி	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

மதிப்புரை

மத்வானந்த லஹரீ:— கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதரான மகோபாத்யாய, வித்யாஸாகர, ஸாஹித்ய நிபுண ஸ்ரீ கே. எல். வியாஸராய சாஸ்திரிகளவர்களால் இயற்றப்பட்டது. தேவநாகர எழுத்தில் ஸம்ஸ்கிருத பாஷையிலேயுள்ளது. பக்கம் 40. விலை 0—8—0

இச்சிறு நூலில் ஸ்ரீமான் சாஸ்திரிகளவர்கள் த்வைதமதப் பிரதிஷ்டாபகரான ஸ்ரீ மத்வாசாரியாரின் அவதார சரித்திரத்தையும் பாலலீலைகளையும் திக்விஜய யாத்திரையையும் வாதிகளை நிக்ரஹம் செய்ததையும் அருளிச்செய்த நூல்களின் ஆழ்ந்த கருத்தையும் 101 இனிய சுலோகங்களில் சுருக்கமாக விளக்கியிருக்கிறார். முன்னுரையில் ஸ்ரீ மத்வர் கி. பி 1199 ல் அவதரித்தார் என்று கூறியிருப்பது கி. பி. 1238 ல் தான் அவதரித்தார் என்று வலியுறுத்தும் ஸ்ரீ கூர்மம் முதலிய கல்வெட்டுகளுக்கு முரண்படுகிறது. பிற மதங்களைக் கண்டித்து தம் மதத்தை ஸ்தாபிக்க அவதரித்த ஸ்ரீ மத்வர் குழந்தைப் பருவத்தில் தொட்டிலில் படுக்கவைக்கப் பட்டபோதே கை கால்களின் சலனங்களாலும் சிரிப்பு முதலியவைகளாலும் பிறமதங்களை நிந்தித்தது போலும் (சுலோகம் 8, 9) என்பதும் ஹனுமான், பீமன், மத்வர் ஆகிய மூன்று அவதாரங்களிலும் த்வைதஸம்பந்தம் அவருக்கு இருந்ததை எடுத்துக் கூறியிருப்பதும் (சுலோகம் 7) மிகப்பொருத்தமானதே. இம்மாதிரியே ஸ்ரீ கிருஷ்ண பகவான் தானாகவே ஆசாரியாரின் கைக்கு எட்டினது போன்ற (சு. 69) ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொரு நூதன கற்பனையினால் வர்ணித்திருப்பதும் 91—92 சுலோகங்களில் சிலேடையினால் மூன்று அவதார காரியங்களை ஒரேமத ஸமூஹத்தால் குறித்திருப்பதும் ஸ்ரீமான் வியாஸராஜ சாஸ்திரிகளின் அபூர்வ கற்பனா சக்தியையும் இயற்கையான கவித்திறத்தையும் விளக்குகிறது. காவ்ய ரஸம் நிறைந்த இவ்வரிய நூல் ஒவ்வோர் மாத்வரின் கையிலும் இருக்கவேண்டியதவச்யம். இதன் ஆசிரியரான ஸ்ரீ சாஸ்திரிகளுக்குப் பேராதரவு அளித்து இத்தகைய முயற்சியில் ஈடுபடும்படி மேன்மேலும் உற்சாகப்படுத்துவது த்வைத மடாதிபதிகள், த்வைத் ஸ்தாபனங்கள், மாத்வப் பிரபுக்கள் இவர்களின் முக்கிய கடமையாகும். மாத்வரல்லாத எமது நேயர்களும் இந்நூலை வாங்கிப்படித்தால் அவர்களும் ஸ்வபாவித ரஸத்தை ருசி பார்க்க ஆவலுள்ளவர்களெனக் கருதப்படுவார்கள். இந்நூலுக்கு இரண்டு மகாமகோபாத்யாயர்களான ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ காபே ராமசந்திராசாரியார் இவர்கள் அபிநந்தனப் பத்திரங்களைக்கொடுத்துதவியிருப்பதும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாதி பிருதுகளைப்படைத்த உத்தராதி மடத்து ஸ்வாமிகள் இதை ஏற்றுக்கொண்டிருப்பதும் இதன் சிறப்பை நன்கு விளக்கும். ஸம்ஸ்கிருத கவிதையே மலினமடைய முற்பட்டிருக்கும் இக்காலங்களில் ஸ்ரீமான் சாஸ்திரிகள் போன்ற கவி மணிகள் பிரகாசித்து வருவது முக்கியமாக எமது மாத்வ உலகத்துக்கும் பொதுவாக ஸம்ஸ்கிருத உலகத்துக்கும் ஆனந்தத்தைஅளிப்பதோடு ஸம்ஸ்கிருதம் (dead language) மரித்த பாஷையெனப்படுவது ஆதாரமற்றது, அல்லது ஒருவாறு உண்மையாயின் அதன் காரணம் அதற்கு பொது மக்களும் அதிகாரிகளும் ஆதரவளிக்காமலிருப்பதேயாகும் என்பதையும் அறிவுறுத்துகிறது.

எம். ராமராவ், பி. எ.

இராமேஸ்வரம்
தர்ம ஸம்ரக்ஷணவாலிபர் சங்கம்

நாளது 1940-௵ ஜூன் மாதம் 1 தேதி இராமேஸ்வரம் தர்ம ஸம்ரக்ஷணவாலிபர் சங்கத்தின் மகத்தான ஏகாதசி ஆரம்ப விழாக் கொண்டாட்டம்.

ஷை சங்கக்காரியாலயத்தில் சங்கத்தலைவர் மு. வ. கோபால சாஸ்திரிகள் தலைமையில் ஷை கொண்டாட்டம் அதிவிமரிசையாய் கொண்டாடப்பட்டது. தலைவரவர்கள் தமது முன்னுரையில் இந்த சங்கத்தின் அபிவிருத்தியைக் கருதி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியசுவாமிகளவர்களின் ஆக்ஞையின் பிரகாரம் இந்த (ஏகாதசி ஆரம்பவிழா) ஆரம்பிக்கப்பட்டதென்றும் இது மேன்மேலும் அபிவிருத்தி அடையவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய உதவிகளை பொது ஜனங்களனைவரும் முன்வந்து செய்யவேண்டுமென்றும் பிர்ம்மஸ்ரீ ஹரிதாஸ் ஸ்ரீனிவாஸ பாகவதர் அவர்களை ஏகாதசியின் மகத்துவமான ருக்மாங்கதா சரித்திரத்தை உபந்யஸிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதன்படி ஸ்ரீ பாகவதரவர்கள் ஷை சரித்திரத்தை 2 மணி நேரம்வரை பொதுஜனங்களும் பக்தி மேலிடும்படியாயும் ரொம்பவும் அழகாயும் சொற்பொழிவாற்றினார்கள். அதன் பின் மதுரையிலிருக்கும் இராமேஸ்வரம் தேவஸ்தானம் காலேஜ் மாணவரும் ஷை சங்கத்தின் அங்கத்தினருமான வி. நடராஜ சர்மா அவர்கள் தற்கால ராஜீய நிலைமையைப் பற்றியும் அநீதியாக காங்கிரஸ் துன்மந்திரிகளால் செய்யப்பட்ட ஆலயபிரவேசச் சட்டத்தைப்பற்றியும் ஷை சட்டத்தை சீக்கிரம் வாலிபர்களாயுள்ள நாம் எதிர்த்து ரத்து செய்யவேண்டுமென்பதைப் பற்றியும் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும்விரிவாக எடுத்துரைத்தது குறிப்பிடத்தக்கது. முடிவில் சங்கத்தின் அங்கத்தினர்களும் பொது ஜனங்களும் தற்கால யுத்தத்தில் நேசதேசங்களுக்கு பூர்ணஜெயம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கப் பட்டதுடன் வழக்கம் போல ஸ்திரவாரபஜனையும் நடைபெற்றது. ஷை சங்கத்தின் ஆலோசனையாளரான பி. மஹாதேவ சாஸ்திரிகள் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஷை கொண்டாட்டம் இனிது முடிந்தது.

கோடிலிங்கம் சங்கர சாஸ்திரிகள்
காரியதரிசி

கோவிலூர் தார்மிக யுவர் சங்கம்

18—6—40௳ ஏகாதசியன்று ஷை சங்கத்து யுவர்களால் வித்தியாசாலையில் மாலை 8 மணிக்கு ஸ்ரீ ராமர், கிருஷ்ணர், அனுமார் முதலிய படத்தை வைத்து பஜனை நடைபெற்றது. ஷை பஜனை இரவு $1\frac{1}{2}$ மணிக்கு முடிவுற்றது. பகவத் பிரசாதமும், வினியோகமும் வழங்கபெற்றது.

இந்த பஜனையை எங்கள் சபையில் 6—4—40௳ ஏகாதசி முதல் பிரதி ஏகாதசி தோறும் நடத்தி வருகிறோம். இதுபோம் எல்லா தார்மிக யுவர் சங்கத்தாரும் நமக்கு ஏற்பட்டிருக்கும் தீங்கு நிவர்த்தியாகும் வண்ணம் பிரதி ஏகாதசி தோறும் பஜனை நடத்தி வருவது நலமென கோவிலூர் தார்மிக யுவர் சங்க காரியதரிசி தெரிவித்துக்கொள்ளுகிறார்.

காரியதரிசி.

கோவிலூர் வர்ணாஸ்ரம சுயராஜ்ய சங்கம்

பொதுக்கூட்டம்.

கோவிலூரில் மே மீ 30௳ மாலை $4\frac{1}{2}$ மணிக்கு தீர்த்த மண்டபத்தில் ஓர் மபெரும் கூட்டம் நடைபெற்றது. அதற்கு தேனிபட்டி பிரம்மஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள் தலைமை வகித்தார்கள். தலைவர் அவர்கள் பேசும்பொழுது வர்ணாஸ்ரம தர்மத்தை அனைவரும் கைகொண்டு அதன்படி கிரியாம்சையில் செய்ய வேண்டுமென்றும் காங்கிரஸ்காரர்களின் அட்டூழியங்களை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் இவ்வூர் வ. சு. சங்கத்தலைவர் பிரம்மஸ்ரீ ரங்கநாத சாஸ்திரிகள் பேசும்பொழுது சமீபத்தில் மாஜி பிரதம மந்திரியான ராஜகோபாலசாரியார் காரைக்குடியில் பேசும் காலத்தில் பிரிட்டிஷ் ராஜாங்கம் யுத்தத்தில் வெற்றி அடையவேண்டுமென்று குறிப்பிட்டது முன்பு அவர்கள் பறைசாற்றி வந்த கொள்கைக்கு முரணாய் இருந்தாலும் இப்பொழுதாவது அவர்களுக்கு ராஜ விஸ்வாஸம் ஏற்பட்டதுபோல் மத சம்பந்தமான விவகாரங்களிலும் கூடிய சீக்கிரம் நல்லறிவு ஏற்படகூடுமென்றும் கூறிப்பிட்டார். பின்னர் குன்னக்குடி வ. சு. சங்க காரியதரிசி ஸ்ரீ கே. என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் தற்கால நிலைமையை விளக்கியும், ராஜீயமும், மதமும் என்பதைப்பற்றி $1\frac{1}{2}$ மணி நேரம் சபையோர்கள் மனது உருகும்படி சொற்பொழிவாற்றிய பின்னர் சங்க காரியதரிசி கே. எ. ராமசாமியால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கரகோஷத்துடன் இரவு 10 மணிக்கு கலைந்தது.

ஜோதிர் மடத்து சுவாமிகளும் ஆலயப்பிரவேசமும்

ஓர் மறுப்பு

1940-௵ மே-மீ 30-௳ ஆர்யதர்மம் பக்கம் 1-ல் சோமதேவ சர்மா வாரக்குறிப்பானது மிகவும் ஆக்ஷேபிக்கத்தக்கதென்று ஆர்யதர்ம அபிமானிகள் கருதுவார்கள். 25—5—40 ல் வந்த மதராஸ் மெயில் பேப்பரில் வந்திருந்ததை சோமதேவ சர்மா பார்த்திருக்க மாட்டார், என்று நம்புகிறேன். அது சம்பந்தமாக மெயிலிலோ வேறு எந்த பத்திரிகையிலோ ஆலயப்ரவேசத்தை சுவாமிகள் ஆதரிப்பதாக உள்ள வசனம் காணபடவில்லை. ஜோதிர் மடாதிபதிகள் நாளது வரை, மதுரைவந்து மதுரையில் உள்ள வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்திற்கு 50வருஷமாக உள்ள காங்கிரஸ் கான்ஸிடியூஷனில் உள்ள மெம்பர்களைப் போல் மூன்று மடங்கு உள்ள அங்கத்தினர்களை சேர்த்து பலப் படுத்தினவர்கள் ஆலயப்ரவேசம் ஒழியப்பாடுபடும் ஒரு தீரபுஷராய் விளங்கி வருகிறார். அப்படி வேலை செய்து வரும் ஒருவரை குறை கூறுவதைக் கண்டு தாங்கள் உண்மை நிலைமையை உணர்ந்து தங்கள் பத்திரிகையில் இதை வெளி இடுவீர்கள் என்று நம்புகிறேன்.

ஜி. எ. விசுவநாத சாஸ்திரிகள்.
மதுரை.

உ

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம் சிஷ்யகோடிகளுக்குக் கொடுத்த

ஆக்ஞா ஸ்ரீமுகம் பிரகாரம்:

திருவாரூர்

ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கும்
ஸ்ரீவல்மிகநாதர் முதல் பஞ்சமூர்த்திகளுக்கும்

136 குடம் கங்காதீர்த்தம் பிரயாகையிலிருந்து தருவித்து மஹாஅபிஷேகத்தை நாளது விக்ரமஸு ஆனிமீ 22உ (5—7—40) முதல் ஆனிமீ 32உதேதி (15—7—40) ஸோமவாரம் முடிய, 136 வைதீகர்களைகொண்டு ஸ்ரீமஹா ருத்ர பாராயணம் செய்வித்து தக்ஷிணயனபுண்யகாலம் ஸமயம் அபிஷேகம் செய்விப்பதென்றும் இந்த 12 நாளிலும் அன்னதானம் செய்வதென்றும் தீர்மானித்திருப்பதாலும், இந்த கைங்கர்யமானது மஹாஜனங்களின் க்ஷேமத்தையும் துர்பிக்ஷம் நீங்கவும், ராஜாங்க க்ஷேமத்தையும் உத்தேசித்து நடத்தப்படுகிறது. இந்தவிதமான கைங்கர்யம் இதற்கு முன் ஒருபோதும் நடந்ததாகக்காணப்படவில்லை. ஒருசமயம் இராஜாக்களால் நடத்திவைக்கப்பட்டிருக்கலாமோ தெரியவில்லை இதற்கு ஏராளமான பொருள் தேவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே தர்மம் என்பது கேட்டும், கேளாமல்தானகவே செய்ய முன்வருவதே சுத்தமான தர்மமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஜெகத்தில் தர்மிஷ்டர்கள் ஏராளம் ஒவ்வொருவரையும் அணுகி நேரில் போய் தெரிவித்து கேட்பதென்பது சிரமமான கார்யம் ஆகையால் கேளாமல் செய்வதே உத்தமம் மென்பதைஅனுஸரித்து தங்களால் இயன்றதை பணமாகவோ அன்னதானததுக்குரியஸ மக்கிரியைகளாகவோ அடியில்கண்ட விலாசத்துக்கு நேரிலோ மனுஷியாள் மணிஆர்டர் மூலமாகவோ அனுப்பியும் கூட இருந்து இந்த தர்மதை நடத்திவைத்து கிருதார்த்தர்களாகவும் இசுவர அனுக்றஹத்தை அடையவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விலாஸம்

பழனிசிவன்,
9நெ. ஸன்னதித்தெரு திருவாரூர். S.I.R.

தார்மிக யுவச்சங்கம்
மதுரை

2—6—40 ஞாயிற்றுக்கிழமை மாலை 4–30 மணிக்கு மதுரை தமிழ் சங்கம் ரோட் 55 நெ. பங்களாவில் அமைந்திருக்கும் ஸனதனதர்ம வித்யாலயத்தில் ஸ்ரீ பால மீனம்பிகை முன்பாக ஓர்மாபெரும் கூட்டம் ஷை சங்க சார்பில் நடைபெற்றது அக்கூட்டத்திற்கு மாம்பலம் ஹைஸ்கூல் ஸமஸ்க்ருதபண்டிட் பிர்ம்மஸ்ரீ கல்லடை குரிச்சி ராமகிருஷ்ண சாஸ்திரிகள் தலைமைவகிக்கும்படி ஷை சங்க பிரசிடெண்ட் ராஜாகிருஷ்ணன் பிரேரேபித்தபடி ஷை கூட்டம் அன்னர் தலைமையில் நடைபெற்றது. பிறகு பாஷ்யாசாரி, வெங்கடசுப்பரமணியன் ராஜாகிருஷ்ணன் இன்னும் 2 பையன்களும் தற்காலீகத்தில் ஸனதனதர்மத்திற்கு ஏற்பட்டுள்ள கெடுதல்களை விளக்கி பேசினர்கள். இன்னும் நம் வாலிபர்கள் இந்த நெருக்கடியான சந்தர்பத்தில் என்ன செய்ய வேண்டியது என்பதைபற்றியும் பேசினர்கள். பிறகு ராவ்பகதூர் ஆர். நரசிம்ம அய்யங்கார் அவர்கள், தாயாரிடத்திலும் தகப்பனரிடத்திலும் முன்னோர்களிடத்திலும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைபற்றியும் பக்திஎன்றால் என்ன அதை எப்படி கையாளுவது என்பதை பற்றியும் பேசினர்கள் பிறகு அத்யக்ஷகர் பிர்ம்மஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரிகள் வாலிபர்களுடைய கடமை என்பதை பற்றியும் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள இந்த ஆலயப்பிரவேசச் சட்டத்தின் விளைவுகளைப்பற்றியும் அநேக பக்திரஸமான ஸ்லோகங்களை உதாரணமாக வைத்து மிக தெளிவாக பேசினர் பாகவதம், பாரதம், ராமாயணம் முதலிய புராணங்களிலிருந்து அநேக ஸ்லோகங்களை எடுத்து சொன்னர் பிறகு ஹாலாஸ்யக்ஷேத்திரத்தின் மஹிமையைப்பற்றியும் அப்பேறபட்ட க்ஷேத்ரத்திற்கு எவ்வளவு பொறுக்கமுடியாத தீமைகள் வந்து இருக்கிறது என்பதைப்பற்றியும் அந்த தீமைகளை எப்படி போக்கிகொள்கிறது என்னும் அதற்கு இந்த அ. இ. வ. சு. சங்கசார்பினலும் தார்மிக யுவக்சங்கத்தினலும் அவைகளை தீர்த்து கொள்ளலாம் ஆகையால் எல்லோரும் இவ்விருசங்கத்திலும் அங்கத்தினர்களாக சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் பேசி முடித்தார் பிறகு ராஜாகிருஷ்ணன் வந்தனேபசாரம் கூறினர் கூடடம் சுமார் 7 மணிக்கு கலைக்கப்பட்டது சுமார் 300 ஆஸ்திகர்களும் 150 ஸ்திரீ ரத்னங்களும் 100 வாலிபர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

நாகூர்
பிராம்மண ஸங்கம்

1940 ஸு மேமீ 26உ ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 9க்கு பிர்ம்மஸ்ரீ எஸ். இராமஸாமி அய்யர் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் சங்கத்தின் அவசரக் கூட்டம் ஒன்று கூடியது. அது சமயம் இச்சங்க கட்டிடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராதாருக்மணி சமேத கோபாலகிருஷ்ண பரமாத்மாவிற்கு விசேஷ அர்ச்சனை, ஆராதனைகள் புரிந்து தற்காலம் ஏற்பட்டிருக்கும் யுத்தத்தில் நம் நேசநாடுகள் மகத்தான வெற்றி எய்துமாறு மிக்க பக்தி சிரத்தையுடன் பிரர்த்தனை புரிந்து துதி செய்யப்பட்டது. பின்னர் கீழ்கண்ட தீர்மானம் பிரரேபிக்கப்பட்டு மனபூர்வமாகவும், ஏகோபித்தும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேறியது.

தீர்மானம்

தற்காலம் ஏற்பட்டிருக்கும் யுத்தத்தில் நேசநாடுகள் பரிபூர்ண வெற்றியை அடையுமாறு இக்கூட்டம் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றது.

ஷை தினத்தன்று இவ்வூர் ஸ்ரீ நாகநாத சுவாமி, ப்ரஸன்ன வெங்கடாலசபதி கோயில் தேவஸ்தானங்களில் தர்மிக டிரஸ்டி ஸ்ரீமான் எஸ். எ. கணபதி செட்டியார் அவர்கள் மேற்கண்ட இரு ஆலயங்களுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து, அதன் விபரத்தை எல்லோருக்கும் அறிவித்து நேசநாடுகளின் வெற்றியை குறித்து மனபூர்வமான பிரார்த்தனை புரிய செய்ய தகுந்த மகத்தான ஏற்பாடானது மிகவும் குறிப்பிடதக்கதாக இருந்தது. ந. நி.

ஸ்ரீ சங்கரசரிதோபன்யாஸம்
சீர்காழி

பிரம்மஸ்ரீ ரிடயர்ட் போஸ்டுமாஸ்டர் டி. கல்யாணராமய்யர் அவர்கள் கிரஹத்தில் கும்பகோணம் காஞ்சி காமகோடிபீடாதிபதிகள் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகளின் ஆஜ்ஞைப்படி ஒவ்வொரு ஏகாதசியிலும் கீதோபன்யாஸக பிரம்மஸ்ரீ ரா. சுப்பராமய்யரவர்களால் உபன்யசித்து வரும் ஸ்ரீ சங்கரசரிதோபன்யாஸம் (1—6—30) சனிக்கிழமை ஏகாதசியன்று நடக்கவேண்டியது அன்று அ. இ. வ. சு. சங்கத்தலைவர் ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேசய்யரவர்களது பிரசாரம் நடந்ததினல் மறுதினம் 2—6—40 இரவு 7½ மணிமுதல் 9½ மணிவரையில் தேவர்களின் அவதாரமும், விசுவரூபரின் அவதாரமும், ஸ்ரீ சரசவாணியின் ஜன்மமும், துர்வாஸரின் சாபகாரணமும், விசுவரூப சரசவாணி விவாக நிச்சயவாக்தான முகூர்த்த விசேஷமும், உபன்யசிக்கப்பட்டது. அடுத்த ஏகாதசி 16—6—40 ஞாயிறன்று சுவேதாரண்ய க்ஷேத்திர மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 14-6—40 சுக்கிரவாரமே ஸ்ரீ விசுவரூப சரசவாணி திருக்கல்யாணமும், ஸ்ரீ சங்கரர் உபநயன சரிதமும் உபந்யசிக்கப்படும். ந-நி.

கோடாபிஷேம்
கும்பகோணம்

ஸ்ரீ நாகேச்வரஸ்வாமி திருமஞ்சன வீதியில் திருக்கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ படைவெட்டி மாரியம்மனுக்கு நாளது விக்கிரம வருடம் சித்திரைமீ 30உ (12—4—40) ஞாயிற்றுக்கிழமை வேனிற்கால வெப்பம் கற்றுவான் வேண்டி கோடாபிஷேகம் செய்யப்பட்டதால். அன்று காலையில் பாலு செட்டி அக்ரஹாரம் படித்துறையிலிருந்து பால்காவடி வீதிப் பிரதக்ஷணம் செய்து வந்தது மாலை கஞ்சி வார்த்தல், அம்பிகைக்கு அபிஷேகம், சமாராதனை இரவு அலங்காராராதனைகள் நடைபெற்றன.

ஷை கோடாபிஷேகத்திற்கு மாரியம்மனுக்கு கர்ணக்கொல்லை தெருவார்கள் நாட்டாமை நாரயணசாமி கொத்தனர் அவர்கள் வெகு முயற்சியால் செயல் வீதிவலம் சிறப்பாய் வந்தது. ஷை கோவில் மருளாளி சாம்பசிவ பூசாரி குமாரர் அப்பு நாயிநார் வெகு பயபக்தியுடன் உத்ஸவத்தை நடத்தினர்கள். ஒ-நி

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.